முருகப்பெருமான் துணை

**மகான் திருநீலகண்ட யாழ்பாண நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

04.08.2022, வியாழக்கிழமை

1. காக்கும் சக்தியாய் வந்த குருவே
கலிமாற்றம் செய்யும் வண்ணம்
ஆக்கமுடன் ஆறுமுகன் அம்சமாக
அவதாரம் எடுத்த நல் அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது நள்ளி திங்கள்
வரங்களென மூவாறோர்திகதி குருவாரம்
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 19 நாள், 04.08.2022 வியாழக்கிழமை)
வழங்குவேன் அருளாசி தன்னை
3. தன்னையே திருநீலகண்ட யாழ்பாண நாயனாரும்
தாமுரைப்பேன் உலகோர் நலம்பெற
அண்ணல் அரங்கன் அவதாரம்
அகிலம் மாற்றும் காரணமாயிருக்க
4. இருக்கவே உலகோர் தானும்
எண்ணமதை தூய்மை ஆக்கிட
கருத்தாக அரங்கன் உபதேசம்
கட்டாயம் ஏற்றுவர வேண்டும்
5. வேண்டும் உயிர்கொலை நீக்கி
விடாது சைவநெறி தொடர்ந்து
தொண்டை அறச் சேவையாக
தேசிகன் அன்னதானம் வகை செய்திட
6. செய்திட சிந்தையில் தெளிவும்
செப்பிட பொறி புலன் வழிவரும்
அய்யம் குழப்பம் ஆணவம் அகந்தை
அனைத்தும் அகன்று மேவி
7. மேவியே எந்தவித தீவினையும்
மேலோங்கா முழுமைபட விலகி
அவனியில் நல் சான்றோர்களென
அரங்கமகான் சீடர்களென அடையாளம்
8. அடையாளம் பெருகி இனிதே
அனைவருக்கும் இனி மறுமையோ
பீடைசோடை பிறதடையோ
பிறவிப் பிணி இல்லா தேற்றம்
9. தேற்றம் கண்டு மாற்றம்
தேசிகனால் முழுமை ஆகி
ஆற்றல்பட அனுகும் மக்கள்
அரங்கன் அவதாரம் உணர்ந்த
10. உணர்ந்த அறிந்த உள்வாங்கிய

உலகோர் அனைவரும் சடுதி
ஞானவான்களாகி மாற்றம்
ஞானிகள் ஆட்சிக் காலமாக

11. ஆகவே உலகம் அடையும்
அன்னதனால் ஓங்காரக் குடிலை
செகத்தோர் கண்டடைய வேண்டும்
செப்பிய அருளாசி முற்றே

–சுபம்–